Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.19**

| | | | |
|---|---|---|---|
| Name: | கணேஷ் | Calling: | உதவி மருத்துவர் |
| Father's/Husband's Name: | கந்தகவுண்டர் | Religion: | |
| Village: | பாலக்கோடு | Age: | 40 |
| Taluk: | பாலக்கோடு, தருமபுரி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.08.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 19 முதன்மை விசாரணை

நான் தற்போது வாணியம்பாடி அரசு மருத்துவமணையில் உதவி மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.02.2023 வாணியம்பாடி அரசு மருத்துவமணையில் பணியில் இருந்தபோது பகல் 12.45 மணியளவில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் இருந்து காவலர் 435 மனோகரன் என்பவர் ஆய்வாளரின் வேண்டுகோள் கடித்துடன் குற்ற எண் 83/2023 என்ற வழக்கின் இறந்து போன இரபீக் வயது 13 ஆண் த/பெ சாமுவேல் என்பவரின் பிரேத்திதை சடல கூறாய்விற்காக ஒப்படைத்தார். பிரேத பரிசோதனை ஆனது அன்று பிற்பகல் 12.50 முதல் 01.50 வரை மேற்கொள்ளப்பட்டது. வெளிப்புற காயங்கள்.

1.இடது பக்க முன் மண்டை எலும்பு (2x2x2 cm) முறிந்து இருந்தது.

2.இடது புற நெற்றி பகுதியில் வெட்டுகாயம் (2x1x1 cm) அளவில் வெட்டுகாயம் ஏற்பட்டு இருந்தது.

3. இடது புற கை எலும்பு FOREARM இரண்டு எலும்புகளும் முறிந்திருந்தது.

உட்புற காயங்கள்.

1. மூளையில் இரத்த கசிவு ஏற்பட்டு இருந்தது.

2. மூளையில் இரத்தம் கட்டியாகவும் இருந்தது.

3. நுரையீரலில் இரத்தம் கட்டியிருந்தது.

மற்ற உள் உறுப்புகள் அனைத்தும் இயல்பாக இருந்தது.

இறப்பிற்கான காரணம் சாலை விபத்தில் ஏற்பட்ட தலையில் ஏற்பட்ட காயம் அதனால் ஏற்பட்ட இரத்த கசிவு மற்றும் அதிகபடியான இரத்த போக்கு அதிர்ச்சியினாலும் இறப்பானது ஏற்பட்டிருக்கலாம் என கருத்துரை வழங்கினேன்.

**இரபீக்கின் சடலகூறாய்வு அறிக்கை அ.த.சா.ஆ 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் கூறிய காயங்கள் அனைத்தும் ஒரு நபர் இருசக்கர வாகனத்தில் வேகமாக சென்று கீழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உண்டு. காயங்களுக்கு நிறம், வடிவம், வயது உண்டு என்றால் சரிதான். அதைக்குறித்து என் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஒரு பதற்றத்தில் வாகனத்தில் செல்லும் போது விபத்து ஏற்பட்டால் இவ்வகையான காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் உள்ளது.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) கணேஷ்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.20**

| | | | |
|---|---|---|---|
| Name: | சத்தியபாக்கியலட்சுமி | Calling: | முதன்மை மருத்துவர் |
| Father's/Husband's Name: | ராஜன் | Religion: | |
| Village: | வாணியம்பாடி | Age: | 48 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.08.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 20 முதன்மை விசாரணை

நான் தற்போது வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முதன்மை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். கடந்த 28.02.2023 வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் முழு நேர பணியில் இருந்தபோது பகல் 12.45 மணியளவில் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் இருந்து காவலர் 250 சரவணன் என்பவர் ஆய்வாளரின் வேண்டுகோள் கடித்துடன் குற்ற எண் 83/2023 என்ற வழக்கின் இறந்து போன சூரியா வயது 12 ஆண் என்பவரின் பிரேத்திதை சடல கூறாய்விற்காக ஒப்படைத்தார். பிரேத பரிசோதனை ஆனது அன்று பிற்பகல் 01.00 முதல் 02.00 வரை மேற்கொள்ளப்பட்டது.

1.இடது கை எலும்பு உடைந்து காணப்பட்டது.

2.இடது காலில் (11x3x2 cm) அளவில் வெட்டுகாயம் சதை மற்றும் ஜவ்வு வெளியில் தெரியும் படி காணப்பட்டது.

3. இடது கண் புருவத்தில் (1x1 cm) வெட்டுக்காயம் காணப்பட்டது.

4.இடது புற தலை எலும்பு FRANDO முன் பக்க கபால எலும்புகள் முழுவதும் உடைந்து காணப்பட்டது.

5.வலது கை மற்றும் வலது கை முட்டி சிராய்ப்பு காயம் (1x2x0.25 cm) காணப்பட்டது.

**பரிசோதனையின் போது மேற்கண்ட காயங்கள் அறியப்பட்டது.**

மற்ற உள் உறுப்புகள் அனைத்தும் இயல்பாக இருந்தது.

இறப்பிற்கான காரணம் சாலை விபத்தில் ஏற்பட்ட தலையில் ஏற்பட்ட காயம் அதனால் ஏற்பட்ட இரத்த கசிவு மற்றும் அதிகபடியான இரத்த போக்கு அதிர்ச்சியினாலும் இறப்பானது ஏற்பட்டிருக்கலாம் என கருத்துரை வழங்கினேன்.

**சூர்யாவின் சடலகூறாய்வு அறிக்கை அ.த.சா.ஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

அதே நாள் ,அதே விபத்தில் இறந்து போன் 13 வயதுடைய விஜய் என்பவரின் பிரேதத்தை ஆய்வு செய்ய வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் இருந்து காவலர் 294 மூர்த்தி என்பவர் ஆய்வாளரின் வேண்டுகோள் கடித்துடன் குற்ற எண் 83/2023 என்ற வழக்கின் சடல கூறாய்விற்காக ஒப்படைத்தார். பிரேத பரிசோதனை ஆனது அன்று பிற்பகல் 02.30 முதல் 03.30 மணிவரை மேற்கொள்ளப்பட்டது.

**பிரேத பரிசோதனையில் காணப்பட்ட வெளிப்புற காயங்கள்.**

1. வலது தோள் பட்டையில் காணப்பட்ட சிராய்ப்பு காயம் 3X 0.25 cm அளவில் காணப்பட்டது.

2. வலது கைமுட்டியில் சிராய்ப்பு காயம் 3X 0.25 cm அளவில் காணப்பட்டது.

3. வலது காது மற்றும் மூக்கில் இருந்து இரத்தம் வழிந்துக்கொண்டிருந்தது.

4.கீழ் தாடை உடைந்த நிலையில் இருந்தது.

5.வலது தொடை எலும்பு ,இடது மணிக்கட்டு எலும்பு உடைந்து இருந்தன.

6.இடது முட்டி 3X 1 X 2 cm வெட்டுகாயம் காணப்பட்டது.

7. வலது பக்க கபால எலும்பு உடைந்திருந்தது.

8. கபால எலும்பு கூட்டை திறந்து பார்த்தபோது வலது இடத்தில் இரத்தக்கட்டும் இரத்தம் உறைந்த நிலையிலும் கசிந்த நிலையிலும் காணப்பட்டன.

மற்ற உள் உறுப்புகள் அனைத்தும் இயல்பாக இருந்தது.

இறப்பிற்கான காரணம் சாலை விபத்தில் ஏற்பட்ட தலையில் ஏற்பட்ட காயம் அதனால் ஏற்பட்ட இரத்த கசிவு மற்றும் அதிகபடியான இரத்த போக்கு அதிர்ச்சியினாலும் இறப்பானது ஏற்பட்டிருக்கலாம் என கருத்துரை வழங்கினேன்.

**விஜய்யின் சடலகூறாய்வு அறிக்கை அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

ஒரு இருசக்கர வாகனத்தில் செல்லும் ஒரு நபர் வேகமாக சென்று கரடு முரடான பாதையில் கீழே விழுந்தால் நான் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் இல்லை. ஒரு இருசக்கர வாகனத்தில் செல்லும் ஒரு நபர் வேகமாக சென்று கரடு முரடான பாதையில் உள்ள 6 அடி பள்ளத்தில் கீழே விழுந்தால் நான் கூறிய காயங்கள் ஏற்பட வாய்ப்புண்டா என்றால் உண்டு. காயங்களுக்கு நிறம், வடிவம், வயது உண்டு என்றால் சரிதான். அதைக்குறித்து என் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் காயத்தின் அளவு மற்றும் தன்மை குறிப்பிட்டுள்ளேன்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) சத்யபாக்கியலட்சுமி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.21**

| | | | |
|---|---|---|---|
| Name: | விக்ரம் | Calling: | கிராம நிர்வாக அலுவலர் |
| Father's/Husband's Name: | சின்னபையன் | Religion: | |
| Village: | கென்னடிக்குப்பம் | Age: | 39 |
| Taluk: | ஆம்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.08.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 21 முதன்மை விசாரணை

நான் கென்னடிக்குப்பத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது வாணியம்பாடி வட்டம், சிக்கனாங்குப்பம் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2020 முதல் 2023 ஜீலை வரை வாணியம்பாடி வட்டம், வளையாம்பட்டு கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணி புரிந்து வந்தேன். கடந்த 28.02.2023 அன்று வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் இருந்து காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள் அன்று காலை 08.45 மணிக்கு வளையாம்பட்டு கிராமம், சாமி அன் கோ லெதர் டேனரி அருகில் சர்வீஸ் ரோட்டில் விபத்தை ஏற்படுத்தி எதிரி சந்தோஷ் என்பவர் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் சரண் அடைந்ததால் என்னையும் எனது உதவியாளரையும் சாட்சிகளாக இருக்கவேண்டும் என கேட்டுக்கொண்டதின் பேரில் நானும் எனது உதவியாளர் சுமதியும் வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திற்கு அன்று மாலை சுமார் 04.15 மணியில் இருந்து 04.30 மணிக்குள் சென்றோம். மேற்படி காவல் நிலையத்தில் எதிரி சந்தோஷ் என்பவரிடம் மாலை 04.30 மணி முதல் 05.15 வரை எவ்வித துன்புறுத்தலும், அச்சுறுத்தலும் இன்றி ஒப்புதல் வாக்குமூலம் பெற்றனர். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் நானும் என்னுடைய உதவியாளர் சுமதியும் சாட்சிகளாக கையொப்பம் இட்டோம். என்னிடம் காட்டப்படும் சந்தோஷ் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது சாட்சி

கையொப்பம் என்னுடையது. மேற்படி சந்தோஷ் என்பவர் அளித்த ஒப்புதல் வாக்குமூலம் பின்வருமாறு. என்னுடைய பெயர் சந்தோஷ், என்னுடைய தந்தை பெயர் வெங்கடேஷ் என்னுடைய தாயார் பெயர் ஈஸ்வரி, என்னுடைய சகோதரர் பெயர் சஞ்சய். நான் இந்து போயர் இனத்தை சார்ந்தவன், நான் வி.ஐ.டி பல்கலைகழகத்தில் B.Sc. computer science மூன்றாம்ஆண்டு படித்துவருகிறேன். நானும் அதே கல்லூரியில் மூன்றாம் ஆண்டு B.Sc. computer science பயின்று வரும் ராகுல், இளவரசன், அரவிந்த் மற்றும் இரண்டாம் ஆண்டு B.Sc. computer science பயின்று வரும் கௌதம் ஆகியோர் சேர்ந்து ஏலகிரி மலை சுற்றுலா செல்ல திட்டமிட்டோம். அதன் படி 28.02.2023 அன்று காலை 07.00 மணிக்கு வேலூரில் இருந்து MIYLES KA 03 AF0194 என்ற பதிவெண் கொண்ட சிகப்பு நிற மகேந்திரா TUV 300 என்ற வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்னை – பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையில் சென்டர்லைனில் நான் காரை இயக்கினேன். சுமார் காலை 08.45 மணியளவில் வாணியம்பாடி வட்டம், கிரிசமுத்திரம் நெடுஞ்சாலையை ஒட்டி சிறிது தூரம் உள்ள சாலையில் செல்லும்போது எனக்கும் முன் ஹீரோ ஹோண்டா இருசக்கர வாகனம் சென்றதால் காரை வலது புற லைனில் செலுத்தினேன். அங்கு லாரியை பார்த்ததும் இடது புறமாக காரை செலுத்தும் போது அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் கவனக்குறைவாகவும் இருந்ததால் காரை என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. இதன் விளைவாக காரானது சாலையின் இடது புறம் உள்ள தடுப்பு சுவரின் மீது மோதி இடது புற சர்வீஸ் ரோட்டில் இரண்டு சைக்கிளில் பள்ளிக்கு சென்றுக்கொண்டிருந்த மூன்று மாணவர்கள் மீது மோதி மரத்தின் மீது மோதியது. உடனே நான் காரில் இருந்து இறங்கி சென்று பார்த்த போது மூன்று மாணவர்களும் சம்பவயிடத்திலே உயிர் இறந்திருந்தனர். நான் அங்கிருந்து பயந்து வாணியம்பாடி பஸ் நிலையத்திற்கு வந்து விட்டேன். பின்னர் அங்கிருந்து வந்து வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்திற்கு சென்று ஆஜர்ஆகிவிட்டேன். அங்கு வாணியம்பாடி போலிசார் என்னை கைது செய்தனர். மேலும் என்னை அழைத்து சென்றால் சம்பவம் நடந்த இடத்தையும் வாகனத்தையும் அடையாளம் காட்டுவேன் என்று ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். **சந்தோஷின் ஒப்புதல் வாக்குமூலம் அ.த.சா.ஆ 6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிதரப்பு குறுக்கு விசாரணை

நான் எனது முதன்மை விசாரணையில் கூறியுள்ள சந்தோஷின் ஒப்புதல் வாக்குமூலத்தில் கூறியுள்ள விவரங்களை தவிர்த்து வேறு ஏதேனும் சங்கதிகளை ஒப்புதல் வாக்குமூலத்தில் விடுபட்டு இருந்தாலோ அல்லது சேர்க்கபட்டு இருந்தாலோ அது என் முன் கொடுக்கப்பட்ட வாக்குமூலம் இல்லை என்றால் சரிதான். சந்தோஷ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் வாணியம்பாடி பஸ் நிலையத்திற்கு வந்து விட்டேன் என்றும் பின்னர் அங்கிருந்து வந்து வாணியம்பாடி

காவல் நிலையத்திற்கு சென்று ஆஜர்ஆகிவிட்டேன் என்று தான் உள்ளதே தவிர வாணியம்பாடி கிராமிய காவல் நிலையத்தில் சென்று ஆஜர் ஆகினேன் என்று நான் கூறியிருப்பது தவறு என்றால் சரிதான்.நான் சிக்கனாங்குப்பத்தில் கிராம நிர்வாக அலுவலராக இருந்த போது சிக்கனாங்குப்பம் , பூமரம், திகாபாளையம் ஆகிய கிராமங்கள் என்னுடைய அதிகார வரம்பிற்கு உட்பட்டது என்றால் சரிதான். நான் சிக்கனாங்குப்பத்தில் கிராம நிர்வாக அலுவலராக எவ்வளவு நாள் இருந்தேன் என்றால் 13 மாதம். அப்படி என்றால் நத்தம் பட்டா எண் 223 யாருடைய பேரில் உள்ளது என்று என்னால் கூற முடியுமா என்றால் கூற முடியாது. ஒரு மணிநேரத்தில் என் முன் கொடுக்கபட்ட ஒப்புதல் வாக்குமூலத்தை நினைவு படுத்தி கூறமுடிந்த என்னால் 13 மாதமாக கிராம நிர்வாக அலுவராக உள்ள கிராமத்தில் உள்ள பட்டா எண் யாருடையது என்று கூற முடியவில்லை என்றால் அதிகமாக இருப்பதால் என்னால் கூற முடியவில்லை. நான் மேற்கூறிய விவரங்கள் அனைத்தும் மனப்பாடம் செய்து தான் கூறினேன் என்றால் ஏற்கனவே கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை ஒரு முறை படித்து பார்த்து தான் கூறினேன். **(அரசு தரப்பில் சாட்சி சாட்சி சட்டப்பிரிவு 159 ன் படி நீண்ட நாட்களாக இருந்தால் நினைவை புதுப்பித்துக்கொள்ள வழிவகையும் உள்ளதால் மேற்படி குறுக்கு விசாரணை கேள்வி கேட்க ஆட்சேபனை தெரிவிக்கபட்டது.** ) எத்தனை மணிக்கு காவல் துணைக்கண்காணிப்பாளர் எனக்கு தகவல் சொன்னார் என்றால் மாலை 04.15 மணிக்கு சொன்னார். அந்த விவரத்தை என் முதன்மை விசாரணையில் சொல்லியிருக்கிறேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் காவல் நிலையம் செல்லும் போது காவல் நிலையத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 20 நபர்கள் இருந்திருப்பார்கள். அந்த 20 நபரில் எத்தனை பேர் போலிசார் , எத்தனை பேர் பொதுமக்கள் இருந்தார்கள் என்று அருதியிட்டு கூறமுடியுமா என்றால் நினைவில்லை. அன்றைய தினத்தில் காவல் நிலையத்தில் உள்ளேயும் வெளியேயும் சுமார் 200 நபர்கள் இருந்திருப்பார்கள் என்றால் நினைவில்லை. காவல் நிலையத்தில் கீழ் தளத்தில் எத்தனை அறைகள் இருந்தது என்றால் நினைவில்லை. காவல் நிலையத்தில் இருந்த உதவி ஆய்வாளர் என் பெயர், என் தந்தை பெயர், என் சொந்த ஊர் ஆகியவற்றை குறிப்பெடுத்துக்கொண்டார்களா என்றால் ஆமாம். அந்த குறிப்பேட்டில் கையெழுத்து போட சொன்னார்களா என்றால் இல்லை. நான் அந்த குறிப்பேட்டில் கையெழுத்து போட்டேன் என்றால் சரியல்ல. காவல் அதிகாரிகள் என்னை கேட்டுக்கொண்டதற்காகவும் அழைத்தற்காகவும் தான் நான் சாட்சியாக கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் எதுவும் பார்க்கவில்லை என்றாலும் எனக்கு எதுவும்தெரியாது என்றாலும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க தான் சாட்சி அளிக்கின்றேன் என்றாலும் சரியல்ல. எனக்கு வழக்கு விவரம்எதும் தெரியாது என்றாலும் போலிசார் கூறியதன் அடிப்படையில் தான் வழக்கு விவரம் தெரியும் என்றாலும் சரியல்ல. நான் அரசு அதிகாரி என்பதற்காகவும் என் மேல் தவறு ஏதும் வந்து விடக்கூடாது

என்பதற்காகவும் சுதாரித்துக்கொண்டு பொய்சாட்சியம் அளிக்கின்றேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) விக்ரம்

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K

Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.CC.No. 14 / 2024

**DEPOSITION OF PROSECUTION SIDE WITNESS No.22**

| | | | |
|---|---|---|---|
| Name: | சுமதி | Calling: | கிராம நிர்வாக உதவியாளர் |
| Father's/Husband's Name: | தனபால் | Religion: | |
| Village: | பெருமாள் பேட்டை | Age: | 41 |
| Taluk: | வாணியம்பாடி | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.08.2025

(எதிரி ஆஜர்.)

அ.சா. 22 முதன்மை விசாரணை

நான் பெருமாள் பேட்டையில் வசித்து வருகிறேன். நான் தற்போது மதனாஞ்சேரி கிராமத்தில் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். 28.02.2023 ம் தேதி, ஒரு வாரம் வளையாம்பட்டு கிராமத்தில் கிராம நிர்வாக உதவியாளராக பணிபுரிந்து வந்தேன். அன்று காலை 08.45 மணியளவில் வளையாம்பட்டு தேசிய நெடுஞ்சாலையில் சி.கோ. டேனரி அருகில் கார் ஒன்று சைக்கிளில் வந்த மூன்று பசங்க மீது மோதி விபத்து ஏற்பட்டதாக அருகில் இருந்தவர்கள் எனக்கு தகவல் சொன்னார்கள். தகவல் தெரிந்து சுமார் 10 நிமிடத்திற்குள் சம்பவயிடம் சென்றேன். அங்கு சிவப்பு நிற கார் ஒன்று மரத்தில் மோதி இருந்தது. பசங்க மூன்று பேரும் இறந்து கிடந்தார்கள். அவருக்கு ஏற்பட்ட காயங்களை நான் கவனிக்கவில்லை. பின்னிட்டு அங்கு போலிசார் வந்து இறந்து கிடந்த குழந்தைகளை எடுத்துச்சென்றார்கள். என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் என்னுடையது. அந்த கையொப்பத்தை 28.02.2023 ம் தேதி, வாணியம்பாடி காவல் நிலையத்தில்

போலிசார் என்னிடம் வாக்குமூலம் கேட்டு எழுதிக்கொண்டார்கள், அதில் போட்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.
எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

நான் வளையாம்பட்டுக்கு வருவதற்கு முன்பே போலிசார் அங்கே வந்து இருந்தார்களா என்றால் கவனிக்கவில்லை. விபத்து எத்தனை மணிக்கு நடந்தது என்றால் தெரியாது. நான் சம்பவயிடம் சென்ற போது போலிசார் என்னிடம் பெயர், முகவரி, நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்ற விவரங்களை குறிப்பெடுத்துக்கொண்டார்கள் என்றால் சரிதான். அந்த குறிப்பில் சம்பவயிடத்தேலே ஒரு கையொப்பம் செய்ய சொன்னார்கள் என்றால் சரிதான். அந்த கையெழுத்து தான் தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டியது என்றால் சரிதான். அதில் என்ன எழுதியிருக்கிறது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது எத்தனை பத்திகளாக இருந்தது என்றால் இரண்டு. இரண்டாவது பத்தியில் முதல் வரி என்னவென்றால் நினைவில்லை. காவல் நிலையத்திற்கு நானும் அ.சா 21 ம் போலிசார் அழைத்ததின் பேரில் தான் சென்றோம் என்றால் சரிதான். நாங்கள் சென்ற போது காவல் நிலையத்தில் என்ன நடந்தது யார் யார் இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் காவல் நிலையம் சென்று ஒரு கையெழுத்து போட்டு விட்டு உடனடியாக சென்று விட்டேனா என்றால் இல்லை, அங்கேயே தான் இருந்தேன். காவல்நிலையத்தில் நான் கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். நான் போலிசார் கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் அ.சா.21 கேட்டுக்கொண்டதன் அடிப்படையிலும் தான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன விவரம் எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். நான் முதன்மை விசாரணையில் கூறிய தகவல்கள் அனைத்தும் போலிசார் சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையிலும் அ.சா 21 சொல்லிக்கொடுத்ததன் அடிப்படையிலும் தான் கூறினேன் என்றால் சரிதான். எனக்கு வழக்கு விவரம் எதும் தெரியாது என்றால் சரியல்ல.

இந்திய சாட்சி சட்டப்பிரிவு 165 ன் கீழ் நீதிமன்ற கேள்வி.

1 கேள்வி – ஆஜர் எதிரியை உங்களுக்கு தெரியுமா?
பதில் - தெரியும்.

2. கேள்வி - ஆஜர் எதிரியை எப்படி தெரியும்?
பதில் – விபத்து நடந்த இடத்திலும் காவல் நிலையத்திலும் ஆஜர் ஆகும் போது பார்த்தேன்.

3. கேள்வி – காவல் நிலையத்தில் ஆஜர் எதிரி என்ன செய்தார் ?

பதில் – அப்போது நான் இல்லை.

4. கேள்வி– உங்கள் முன்னிலையில் யாரிடமாவது ஒப்புதல் வாக்குமூலம் பெற்றார்களா என்றால்?

பதில் – என் முன்னிலையில் யாரிடமும் ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை.

5. கேள்வி – தற்போது நீதிமன்றத்தில் உங்களிடம் காட்டிய ஒப்புதல் வாக்குமூலத்தில் காட்டிய கையொப்பத்தை எங்கு, யாரிடம், யார் முன்னிலையில் போட்டீர்கள்?

பதில்– நானும் கிராம நிர்வாக அலுவலர் மற்றும் காவல் ஆய்வாளர் மட்டும் தான் இருந்தார்கள்.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) சுமதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K